# கிழக்கு மாகாண சபையின் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்கள் குழுவிற்கு விண்ணப்பங்களை கோருதல்

தாபன விதிக்கோவையின் XLVIII மற்றும் XLVIII ஆம் அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்ட தவறுகள் தொடர்பில் கிழக்கு மாகாண சபையின் ஒழுக்காற்று விசாரனை உத்தியோகத்தர்கள் குழுவில் பதிவுசெய்து கொள்வதற்கு ஊக்கமுள்ள மற்றும் தகைமைகள் பூர்த்தி செய்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கோரப்படும் தகமைகள் அனைத்தும் விண்ணப்ப முடிவுத்திகதியான 2024.08.07ற்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**தகைமைகள் (அரச நிருவாக சுற்றறிக்கை 07/2010)**

**ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்காக :**

- தாபன விதிக்கோவையின் முதலாவது அட்டவணையின் கீழ் ஏதேனும் சந்தர்ப்பத்தில் தண்டனை அளிக்கப்படாத உத்தியோகத்தராக இருத்தல் அல்லது தாபன விதிக்கோவையின் இரண்டாவது அட்டவணையின் கீழ் தவறு இழைக்கப்பட்ட பின்னர் ஐந்து வருட திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தராக இருத்தல்.
- அரசாங்க சேவையில் பதவி நிலை உத்தியோகத்தராக ஐந்து வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.
- 2024.08.07 ஆம் திகதிக்கு 70 வருடங்களுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் தனது விண்ணப்பத்துடன் ஓய்வூதிய அனுமதிக் கடிதத்தின் பிரதி மற்றும் ஓய்வூதியம் வழங்கும் கடிதத்தின் பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

**தற்போது கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்காக :**

- தனது சேவைக்காலத்தினுள் தாபன விதிக்கோவையின் முதலாவது அட்டவணையின் கீழ் ஏதேனும் சந்தர்ப்பத்தில் தண்டனை அளிக்கப்படாத உத்தியோகத்தராக இருத்தல் அல்லது தாபன விதிக்கோவையின் இரண்டாவது அட்டவணையின் கீழ் தவறு இழைக்கப்பட்ட பின்னர் ஐந்து வருட திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தராக இருத்தல்.
- சேவையில் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

**சட்டத்தரணிகளுக்கானது :**

- நீதித்துறை சேவையில் 10 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.
- 2024.08.07 ஆம் திகதிக்கு வயது 70க்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

கடமை பிரதேசம் : கிழக்கு மாகாணம்

கொடுப்பனவுகள் : அ.நி.சு. 18/2018

விண்ணப்ப முடிவுத் திகதி : 2024.08.07

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்),
பிரதிப் பிரதம செயலாளர் (நிறுவாகம்) அலுவலகம்-கி.மா.
கண்ணியா வீதி, வரோதயநகர், திருகோணமலை. அல்லது
dcsadmofcep02@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்

**விண்ணப்பம் தபால் மூலம் அனுப்புவதாக இருப்பின் :**

கடித உரையில் இடது பக்க மேல் மூலையில் 'ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் குழுவில் பதிவு செய்தல்' என்பதனையும்,

**விண்ணப்பம் மின்னஞ்சல் ஊடாக அனுப்புவதாக இருப்பின் :**

மின்னஞ்சலின் தலைப்பாக 'ஒழுக்காற்று விசாரனை உத்தியோகத்தர் குழுவில் பதிவு செய்தல்' என்பதனை குறிப்பிடவும்.

ஓய்வூதிய அனுமதிக் கடிதத்தின் பிரதி மற்றும் ஓய்வூதியம் வழங்கும் கடிதத்தின் ஸ்கான் பிரதிகளை இணைக்கவும்.

தங்களது டிஜிட்டல் கையொப்பத்தை பயன்படுத்தவும்.

**பிரதம செயலாளரது தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும்.**